செய்தி வெளியீடு எண்: 701 நாள்: 30.10.2007

# தமிழ் நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை– 34.

தமிழ் நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் 1994–ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதில் 38 கட்டிட தொழிலில் ஈடுபட்டுள்ள 15 முதல் 60 வயது வரை உள்ள தொழிலாளர்கள் உறுப்பினராக சேரலாம்.இந்த வாரியத்தில் உறுப்பினராக ரூ.25/– பதிவுக் கட்டணமாகவும் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பதிவை புதுப்பிக்க ரூ.10/– கட்டணமாக இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்பு இந்த கட்டணங்களை 1.9.2006 முதல் இரத்து செய்து விட்டது. இந்த வாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களக்கு கீழ்க்கண்ட 8 வகையான நலத் திட்டங்கள் வழங்கப்படுகிறது.

1) விபத்து காப்பீடு திட்டம் மற்றும் ஈமச்சடங்கு உதவி .
2) விபத்து ஊனம் .
3) இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு உதவி.
4) கல்வி உதவித் தொகை.
5) திருமண உதவி.
6) மகப்பேறு உதவி.
7) கண் கண்ணாடி வாங்கிட உதவி.
8) ஓய்வூதியம்.

இந்த வாரியத்தில் 1995 முதல் 28.10.2007 வரை 16,02,158 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். அதில் 1,39,148 பயனாளிகளுக்கு ரூ.46,65,81,708/– உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் (13.5.2006 முதல் 28.10.2007 வரை ) 68,788 பயனாளிகளுக்கு ரூ.21,73,84,984/– உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அதே காலத்தில் 5,13,366 தொழிலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்துள்ளார்கள். 2,534 தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் நிலுவைத்தொகையாக 28.10.2007 வரை ரூ.1,89,58,037/– வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பிரசவகால உதவித் தொகையை **1.9.2006** – லிருந்து **ரூ.4,000/–ல் இருந்து ரூ.6,000/–** ஆகவும் **1.7.2007** முதல் மாத ஓய்வூதியத்தினை **ரூ.300/–** விருந்து **ரூ.400/–** ஆகவும் உயர்த்தியுள்ளது.

வாரியத்தில் பதிவு செய்து கொள்ளும் கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், தொழிலாளர்களின் வசதிக்காக 6 பணியாளர்களை கொண்ட புதிய 15 மாவட்ட அலுவலகங்கள் அண்மையில் திறக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இயங்கிவரும் 15 மாவட்ட அலுவலகங்களுக்கு கூடுதலாக 4 பணியாளர்களை அரசு நியமித்துள்ளது.

தமிழ் நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனுக்காக தமிழ் நாட்டில் சென்னை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் குழந்தைகள் காப்பகம் திறக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள கொத்தனார் ( Mason ), குழாய் பதிப்பவர் ( Plumber ), வர்ணம் அடிப்பவர் ( Painter ), மின்அமைப்பாளர் ( Electrician ) மற்றும் தச்சு வேலை செய்பவர் ( Carpenter ) ஆகிய 5 இனங்களில் பணிபுரியும் 200 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி வழங்க, அரசு ஆணை (டி) 519 நாள் : 9.7.2007 –ல் ஆணையிடப்பட்டுள்ளது.

2007–2008 நிதிநிலை அறிக்கையில் தமிழ் நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை கணிணிமயமாக்க உரிய அறிவிப்பை அரசு வெளியிட்டுள்ளது.

மாவட்ட அளவில் வாரியங்கள் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளை கண்காணிக்க அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் கண்காணிப்பு குழு 1.06.2007 முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ் நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பெறப்படும் கல்வி உதவி , மகப்பேறு உதவி மற்றும் ஈமச்சடங்கு செலவு உதவி ஆகிய நலத்திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குதல் மற்றும் பட்டுவாடா செய்தல் ஆகிய பணிகளை தொழிலாளர் துறையின் மாவட்ட அளவிலான சார்நிலை அலுவலர்களுக்கு அதிகார பகிர்வு வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. (அரசு ஆணை எண்.200 நாள் : 8.10.2007 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை )

*வெளியீடு, இயக்குநர்.*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*தலைமைச் செயலகம், சென்னை-9.*

**********